









# ஆசார்யர்களின் க்ரந்த முத்துக்கள்

**தொகுத்தளிப்பவர் : ஸ்ரீ ப ரா வி**

**மலர் 1** **இதழ் 36** **3.09.2025**

ஸ்ரீமதே வராஹ மஹாதேசிகாய நம:



# உள்ளே....

## படித்து பின்பற்ற வேண்டிய
## முத்துக்கள்
## உபதேசங்கள்






ஸ்ரீ ராமானுஜரை உடையவர், எம்பெருமானார், யதிராஜர் மற்றும் பாஷ்யகாரரர் போன்ற பல பெயர்களாலும் அழைக்கிறார்கள். ஆனால் ராமானுஜரே திருப்பாவை ஜீயர் என்ற மற்றொரு பெயரை விரும்பினார். ஆண்டாளின் திருப்பாவையின் முப்பது பாடல்களில் உள்ள 18வது பாடல் அவருக்கு மிகவும் பிடித்திருந்தது. ஸ்ரீ ராமானுஜச்சாரியார் இந்த பாடலை விரும்பியதால், வைணவர்கள் இந்த பாடல்களை அனைத்து பாராயண நிகழ்வுகளிலும் இரண்டு முறை பாடுகிறார்கள்.

# முத்துக்கள்

***ஆத்ம ஸமர்ப்பணம் என்பது***

**1.** ***தன்னுடைய ஆத்மா என்பது, தன்னைக் காப்பாற்றுகிற பகவானுக்காகவே உள்ளது.***

**2.** ***ஆத்மா குறித்த தனது பொறுப்பு கிடையாது***

**3.** ***இப்படி ஸமர்ப்பணம் செய்வதன் மூலம் கிடைக்கும் பலன் தனக்கல்ல***

***இவ்வாறு உறுதியிட்டுச் செய்வது ஆத்மஸமர்ப்பணம்.***

***************************************************************

*1.**ஆநுகூல்ய ஸங்கல்பம் = பகவானுக்கு அநுகூலமாகவே நடக்க உறுதிகொள்ளுதல்***

*2.* ***ப்ராதிகூல்யவர்ஜனம் = பகவானுடைய திருவுள்ளத்துக்கு எதிராக நடக்கமாட்டேன் என்கி உறுதி***

**3.** ***மஹாவிச்வாஸம் = பகவான் நிச்சயமாக மோக்ஷம் அருள்வான் என்கிற நம்பிக்கை***

*4.* ***கார்ப்பண்யம் = தன்னிடம் பக்தியோகம் முதலிய எதுவும் செய்யச் சக்தி இல்லை என்பதைச் சொல்லி கர்வத்தைவிட்டு பசுவானின் க்ருபைக்கு இறைஞ்சுதல்***

**5.** ***கோப்த்ருவவரணம் = பக்தியோகம் முதலிய எதுவும் செய்யச் சக்தி இல்லாத தனக்கு க்ருபைசெய்து, அந்த உபாய பலன்களைத் தந்து காக்குமாறு வேண்டுதல் இவற்றைத் தவிர*** **6** ***வதாக ஆத்ம நிஷேயம் தன்னுடைய ஆத்மாவை, பகவானுடைய சொத்து என்று நினைத்து உம்முடைய உம்மிடமே ஸமர்ப்பிக்கிறேன் என்று மைர்ப்பிப்பது.***

***இதுவும் சொல்லப்படுகிறது***

***ப்ரபத்தி = அங்கி. மேற்சொன்னவை அங்கங்கள் இவை இருந்தால்தான் ப்ரபத்தி ஈடேறும். த்ரிஜடை பிபீஷணன் சரணாகதியில் இவை இருந்தன. லௌகீகத்தில், பொக்கிஷம் போன்ற ஒரு பொருளை***

ருவனிடம் நாம் கொடுக்கும்போது இந்த 5ம் இருக்கும்.இவற்றில், மஹாவிச்வாஸம் மிகமுக்யம். அது வருவது அரிது.ஏனென்றால், பகவான் எல்லாம் அறிந்தவன்; எல்லா சக்திகளும் உடையவன்: ர்மாவுக்குத் தக்கபடி பலன் அளிப்பவன்;பிறரிடம் எந்த உபகாரத்தையும் எதிர்பார்க்காதவன் னக்கு ஒப்பாரும், மிக்காரும் இல்லாதவன் ; பரிவார தேவதைகளைப்போல உடனே பலன் யுளிக்காதவன்= இப்படிப்பட்ட எம்பெருமான்

1. கணக்கில்லாத பாவங்களைச் செய்திருக்கிறோமே, பகவான் கிட்டுவானா

2. மோக்ஷத்துக்குத் தடையாக எண்ணிலாப் பாவங்களைச் செய்தவனுக்கு மோக்ஷம் தருவானா

3. அல்பமான ஒரு செயலுக்காக, ஏராளமான பலனைக் கொடுக்கும் மோக்ஷத்தை அருள்வானா

4. அப்படிக் கொடுக்கிறானென்றாலும், நாம் பிரார்த்திக்கும்போது கொடுப்பானா

5. ப்ரார்த்திக்கும்போது கொடுத்தாலும் என்ற தரம் குறுக்கிடுமா

இந்த சந்தேகங்களுக்கு

1. பகவான் ஸர்வஜ்ஞன்; ஸர்வசக்தன் ; அளவற்ற பாபங்களைச் செய்த சேதனனால் அணுகமுடியாதவனே. இருந்தாலும், சேதனனுக்காகப் பரிந்துபேசும் பிராட்டியின் சிபாரிசை மறுக்கமுடியாது. சேதனனின் பாபங்களையெல்லாம் க்ஷமிக்கிறான். ஆதலால் பகவான் கிட்டுவான்; நாம் நெருங்கலாம்.

2.பகவான், பாபபுண்ய கர்மங்களுக்குத் தகுந்தவாறு பலனை அளிப்பவன்தான். இருந்தாலும் ப்ரபத்தி செய்ததற்கு இரங்கி, கருணைகாட்டி, தான் எஜமானன் -- சேதனன் அடிமை என்கிற ஒழிக்கமுடியாத பந்தத்வத்தால், சேதனனுக்குப் பலன்களைத் தருகிறான்.

3. பகவான் எந்த விருப்பமும் இல்லாதவன்; பிறர் உபகாரம் என்பதை வேண்டாதவன் இருந்தாலும், சேதனன் செய்யும் சிறிய செயலை உகந்து, அதைப் பெரிய உபகாரமாகப் பாவித்து சேதனனுக்குப் பலன் தருகிறான்.

4. பகவான், மற்ற தேவதைகளைப்போல, ப்ரார்த்தித்தவுடன், பலன் கொடுப்பதில்லை ; மற்ற பலன்களைத் தாமதித்துக் கொடுத்தாலும், ப்ரபத்தி செய்துகொண்டவனுக்கு, வேறு எதையும் எதிர்பார்க்காமல், தன் ஸங்கல்ப மாத்ரத்தில் சேதனன் விரும்பிய போது பலனைத் தருகிறான்.

5. பகவான் ஸர்வ ஸ்வதந்த்ரன் ; ஒப்பாரும் மிக்காரும் இல்லாதவன் என்று இப்படிப் பல இருந்தாலும் தன்னை அடைந்தவரின் தரத்தைப் பாராமல், சேதனன் கோருகின்ற பலனையே தனக்குப் ப்ரயோஜனம் என்று கொண்டு சேதனனுக்குப் பலனைத் தருகிறான்.

இவைகள், ஆசார்ய கடாக்ஷம், உபதேசம் இவற்றால் நன்கு புரிந்து தெளிந்தால் மஹாவிச்வாஸம் வரும். அப்புள்ளார் சொல்கிறார் பகவானுடைய பரத்வத்தை,பெருமையைக் கண்டு, அவனை அணுக அஞ்சுபவன் மனிதர்களில் தாழ்ந்தவன்; பகவானுடைய எளிமை ஸௌலப்யத்தை உணர்ந்து அவனை அணுகுபவன் பரம ஆஸ்திகன், மோக்ஷத்துக்கு என்றுமட்டில் ப்ரபத்தி செய்யும் போது ஸாத்விக த்யாகம் ” ---பலனில் பற்றை விடுதல் ----என்கிற அங்கமும் முக்யம்.

**********************************************************

ஒருகாலே சரணாக அடைகின்றார்க்கும்
உனக்கடிமை ஆகின்றேன் என்கின்றார்க்கும்
அருக்காதே அனைவர்க்கும் அனைவராலும் அஞ்சேல் என்று அருள்
கொடுப்பான் இதுதான் ஓதும் இருக்காலும் எழில் முனிவர்
நினைவினாலும் இவையறிவார் செயலுடன் என் இசைவினாலும்
நெருக்காத நீள் விரதம் எனக்கொன்று என்று நெறியுரைத்தார்
நிலையுணர்ந்து நிலை பெற்றோமே

இது ஸ்வாமி தேசிகனின் அம்ருதாஸ்வாதினி பாசுரம் 16.

பொருள்
ஒரே ஒரு முறை சரணம் என்று அடைக்கலம் புகுந்தவர்க்கும் (சரணம்ப்ரபத்யே ) உனக்கே நான் தாஸபூதன் என்று இருப்பவர்க்கும் குறையைதும் இன்றி தன்னை சரணாகதி பண்ணவர்கள் விஷயத்தில் ஒருவராலும் எல்லோரிடத்திலிருந்தும் அச்சம் இன்றி இருக்க அபயப்ரதானம் செய்வேன் என்கிறான்.

அதாவது அடைக்கலம் புகுந்தவரை இவன் புண்ணியம் செய்தவன் என்று ஏற்றுக்கொள்வதோ அல்லது இவன் பாபம் செய்தவன் என்றோ

நிராகரிப்பதில்லை. எவனாகிலும் காக்கிறான். இதற்கு உதாரணம் பாபமே செய்த க்ஷத்ரபந்து என்பவன் காப்பாற்றப்பட்டான். இதுமட்டுமின்றி அவர்கள் எப்பேர்ப்பட்ட சக்திமான்களாக இருந்தாலும் வேண்டாதவராக இருந்தாலும் வேண்டியவர்களாக இருந்தாலும் (இதைத்தான் அனைவர்க்கும் அனைவராலும் அஞ்சேல் என்று அருள் கொடுப்பான் என்கிறார்.

சரணமடைந்தவர்களைக் காப்பது என் நெறி. (விரதம்)

இது நான்கு காரணங்களையிட்டு எனக்கு உயர்ந்தது.

1.எல்லாவற்றிற்கும் மூலமான வேதத்தில் சொல்லப்பட்டுள்ளது.

2.ரிஷிகளால் ஸ்ம்ருதிகளில் வகுக்கப்பட்டுள்ளது.

3.ஸம்ப்ரதாயப் பெரியோர்கள் வகுத்துக்காட்டியது. அவர்கள் அனுஷ்டித்தது

4.எனக்கே (எம்பெருமான்) பிடித்தமானது. (இதை உம்பர் தொழும் திருமால் உகந்து ஏற்கும் உபாயம் என்று பிரிதோரிடத்தில் ஸ்வாமி தேசிகன் புகழ்கிறார்.

இதை நன்கு அறிந்து நிலைபேற்றோமே

அதாவது உறுதியோடும் சரணாகதி (அனுஷ்டானத்திற்குப் பின்) இனி மோக்ஷத்திற்காக ஒன்றும் செய்யத்தேவையில்லை என்று செய்தவேள்வியராகி கவலையின்றி இருப்போம்

என்று இப்பாசுரத்தில் ஸ்வாமி ஸ்ரீ தேசிகன் சாதிக்கிறார்.

